[illegible] சென்னைக்குப்
பெரியார் வருவார்; பெருமக்க்ள் வரவேற்பார். 13-6-58

கிழமை இதழ்

குயில்

விலை: 13 காசுகள்

ஆசிரியர்: பாரதிதாசன்

குரல்: 1	புதுச்சேரி, 8—6—58 ஞாயிறு	இசை: 2

தமிழ்நாட்டை விடுதலை செய்வோம்.

தமிழ்நாட்டை விடுதலை செய்வோம்—கெட்ட
சழக்கர் ஆட்சியை வேரோடு கொய்வோம்!

அமையாப் பார்ப்பனப் பகைவர்க்குத் தமிழரை
அண்ணாத் துரைகள் காட்டிக் கொடுத்தாலும்,
தமிழுக்கு வடமொழி தாய் என்று தெ. பொ
மீனாட்சி அழகுகள் சாற்றித் திரிந்தாலும்
தமிழ்நாட்டை விடுதலை செய்வோம்—கெட்ட
சழக்கர் ஆட்சியை வேரோடு கொய்வோம்!

நேருவின் அடிகளில் காம ராசர்கள்
நெடுஞ்சாண் கடையாய் விழுந்திட்ட போதிலும்
தீராப் பகையோடு தமிழர் கூட்டத்தைச்
சிறையில் தள்ளிக் கொலைசெய்த போதிலும்
தமிழ்நாட்டை விடுதலை செய்வோம்—கெட்ட
சழக்கர் ஆட்சியை வேரோடு கொய்வோம்!

தமிழர் செய்த தவம்பலித் திட்டது
பெரியார் திருவுளம் எமைக்காக்க வந்தது!
சமையம் சாதி ஆரியம் இந்தி
தலைதூக்கி எங்கள் காலைக் கௌவினும்
தமிழ்நாட்டை விடுதலை செய்வோம்—கெட்ட
சழக்கர் ஆட்சியை வேரோடு கொய்வோம்!

புதுச்சேரி, தி. வ. ஆ. 1989 வைகாசி 26

படிக்க விருப்பந்தான்...
பள்ளியில் வகுப்பில்லை!

தமிழர்கள் இருட்டுக் கிடங்கில் குடி புக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்கு முன் அவர்கள் ஒளி தழுவிய வெளியில் நல் வாழ்வு நடத்தியவர்கள்.

ஆயிரத்து ஐந்நூறு யாண்டின் முற்பட்டதான இறந்தகால நிழற்படத்தை உற்று நோக்குங்கள். தமிழர்கள் எல்லோரும் படித்தவர்கள். ஆயிரத்தொருவர் புலவர், பதினாயிரத்தொருவர் பாவாணர். பல்கோடித் தமிழ் மக்களும் படித்தவர்கள். அவர்கள் ஒளியுலகில் நல்வாழ்வு நடத்தி இன்புற்றுக் கிடந்தார்கள்.

அதன் பிற்பட்ட காலத்தில் தமிழர்களின் நிலை மாற்றமடையத் தொடங்கியது.

**"ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆம் செல்வம்
மாறிடும் ஏறிடும்"**– அன்றோ?

மாறியே விட்டது. பிறக்கும்போதே ஒருவன் உயர்ந்தவனும், ஒருவன் பிறக்கும்போதே தாழ்ந்தவனும். தமிழர்கள் அனைவரும் தாழ்ந்தவர்களாம். அவர்கள் உயர்ந்த சாதியார்க்கு அடிமையாயிருந்து காலந்தள்ள வேண்டுமாம்.

தமிழர்கட்குப் படிப்பு ஒன்றா? அறிவுத் துறையில் அவர்கட்கு நாட்டம் ஏன்? என்றதொரு கொள்கை பரவிற்று தமிழர்கட்கிடையில்! இந்த நெருப்பு மழைக்குக் குடை ஏது?

கல்விக்கும் தமிழர்க்கும் தொடர்பற்றுப் போயிற்று. தமிழ்ச்சான்றோர் அனைவரும் தமிழரை நோக்கிக் கற்கை நன்றே கற்கை நன்றே? என்று கதறினர். கற்க கசடற என்று கதறினர். இதற்கு மாறாகக் கல்வியின் பயனையே மறந்தனர் தமிழர்கள். இருட்டுக் கிடங்கில் குடி புகுந்தனர். வெளியில் எட்டிப் பார்க்கவும் எண்ணினாரில்லை.

தமிழரசர்கள் கோயில்கள் கட்டி... எங்கும் பெரிது பெரிதாக. அருளைத் தேடச் சொன்னார்கள் விரைவில் இறந்து ஒழியும்படி.

இருட்காலமே தலை தூக்கி நடந்து கொண்டிருந்தது.

இப்போதுதான் இந்த நூற்றாண்டின் நடுவில்தான் ஒரு மின்னல் தோன்றிற்று. காது கிழிய இடி ஒன்று இடித்தது. இருட்டுக்கிடங்கில் அடைபட்டிருந்த தமிழர்கள் வெளியில் எட்டிப்பார்த்தார்கள். ஒளி தழுவிய வெளி வாழ்க்கைக்கு நல்லதாகக் காட்சியளித்தது.

கல்விப்பயனை உணர்ந்தார்கள். தம் மக்களின் கண்ணற்ற நிலையை எண்ணிக் கலங்கினார்கள். இந்த நிலை வரவேற்கத் தக்கதன்றோ? தமிழ் மக்களின் தலைவர் என்போர்—ஆட்சியில் அமர்ந்துள்ளோம் என்போர்—அனைவரும் இந்நிலை கண்டு மகிழ வேண்டுமன்றோ?

கல்விக்கழகம் நோக்கித் தாம் பெற்ற மகனை—மகளைக் கையிற் பிடித்துச் செல்லுகிறார்கள்; கண் கலங்கித் திரும்புகிறார்கள், வகுப்பில் இடமில்லையாம்.

அரசியல் தலைவரும் ஆளவந்தாரும் சிரிக்கிறார்கள் இந்த நிலை கண்டு! ஏன் எனில், சிபாரிசுக்குத் தம்மிடம் வரவேண்யடிநிலை பெற்றோர்க்கு ஏற்பட்டு விட்டதல்லவா?

மெய்யாகவே, ஒரு மாணவருக்கு ஒரு துறையில் ஒரு வகுப்பில் இடங்கோரி ஆளவந்தார் வீட்டு-அரசியல் அலுவல் தலைவர் வீட்டுக் குறட்டுப் பந்தலின் காலைப் பிடித்துக் காத்திருக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

ஆளவந்தார்கள் ஐந்தாண்டுத்திட்டம் போடுகிறார்கள். ஆயிரம் கோடி செலவிடப் போகிறோம் என்று காரில் திரிவதன் வாயிலாகவே அத்தொகையைச் செலவிட்டு வருகிறார்கள்.

வானக் கூரையைச் சிறிது தாழ்த்தப் போகிறார்களாம். வையத்தைச் சிறிது உயர்த்தப் போகிறார்கள். கடலைப் பெரிதாக்கப் போகின்றார்களாம். மலையைக் குள்ளமாக்கப் போகின்றார்களாம். பயனுள்ள வேலையாக இருக்கலாம். படிப்போர்க்கு வகுப்புக்கள் நிறைய ஏற்பாடு செய்யவேண்டுமா இல்லையா?

இன்றியமையாத வேலை எது?

இன்று கோடிக்கணக்காக உள்ள தமிழ் மாணவர்களின் நிலை என்ன? கண்ணீரும் கம்பலையுமாகத் திரிகின்றார்களே வகுப்பு வாங்கித் தரும்படி! அவர்கட்கு வசதி செய்து தரும் வேலைதான் அரசினர்க்கும் ஆளவந்தார்க்கும் முதல் வேலை.



அவள் யார்?

ஓர்நிலவே அவள்தானோ கதிர்தானோ
கொம்புத் தேனோ— நடை
ஓவியமோ புள்ளி மானோ — வேண்டும்

நேயத்தினிலே நெஞ்சம் தோயும்போதிற்—புதிதாய்
நேரிட்ட இன்பத் தேனூற்றோ—வந்து
நெஞ்சைத் தொடும்குளிர் காற்றோ? (ஓர்)

மாணிக்கச் சிரிப்புக் காரியோ—நெஞ்சை
மகிழ்விக்கும் வானம் பாடியோ
ஆணிப் பொன்னே அவள் மேனியோ—மொழி
அனைத்தும் தித்திக்கும் சீனியோ? (ஓர்)

ஆடும் மயிலோ பாடும் குயிலோ—படம்விரித்
தாடும் மயிலோ பாடும் குயிலோ? (ஓர்)

நாடும் அகப் பொருளி னுக்கே—அவள்
நல்ல தோர் இலக்கியமோ
தேடரிய கலைப் பொருளோ—அருமைச்
செந்தமிழின் இன் சுவையோ? (ஓர்)

பந்து விளையாட்டு

கரடிகள் கீழிருந்து கைஏந்த ஏந்த
மரக்கிளை ஆடரங் காகக்
குரங்கு பந்தடித்தது விளாம்பழம் கொண்டே!

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

இலக்கணம்

இலக்கம்-குறி. அஃதாவது, ஒருவன் எந்த இடத்தில் அம்புவிட வேண்டுமோ அந்த இடம் இலக்கம். எந்தஇடத்தை அடையவேண்டுமோ அந்த இடம் இலக்கம்.

இலக்கம் தூய தமிழ்ச்சொல். "எல்லை இலக்கம்" என்பது தொல்காப்பிய நூற்பா.

இனி அந்த இலக்கம் என்பது, அம் என்ற சாரியை குறைந்து, இலக்கு என நிற்பதும் அணம் என்பதைச் சேர்த்துக்கொண்டு இலக்கணம் என நிற்பதும் உண்டு.

(இலக்கு + அணம்) இலக்கணம் என்றால் என்னபொருள் எனில், இலக்கை நெருங்குவது என்பதாம். அணம் - அணுகுவது. ஈறு திரிந்ததோர் ஆகுபெயர் என்பார்கள் இதை.

• அண என்று மட்டும் நின்றால் என்ன பொருள் எனில், நெருங்க என்பது. இது செயவென் எச்சம்.

(இலக்கு + அண) இலக்கண என்றால் இலக்கை நெருங்க என்று பொருள். இவ்வாறு ஆன்றோர் ஆட்சியில் வந்துளதா எனில், மணிமேகலையில் *௩௰*-வது பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றகாதை 18-வது அடியில்.

இலக்கணத் தொடர்தலின்

(இலக்கு+அண) என வந்துளது காண்க. அதைத் தொடர்ந்தும்,

சொற்றகப்பட்டும் இலக்கணத் தொடர்பால்

என வந்துளது. இவற்றால் இலக்கணம் என்பது மேலே நாம் குறித்த பொருளையே குறிப்பது விளங்கும்.

என்வே, இலக்கணம் என்பது தூய தமிழ்ச் சொற்றொடர் என்பது பெற்றாம்.

இலக்கணம் என்பது, லக்ஷணம் என்ற வடசொல்லினின்று வந்ததாம். இவ்வாறு, தமிழாராய்ச்சி வல்லவர் என்று பிழையாக நம்மவரால் கருதப்படும் தெ. பொ. மீனாக்கி அழகு முதலியவர்கள் கூட எழுதியும் பேசியும் வந்துள்ளார்கள்.

இவர்கள், பார்ப்பனரின் கூலிக்காகத் தமிழ் வடமொழியினின்று வந்தது என்று பிதற்றும் ஆட்கள் என்பதையும், ஆங்கிலப் படிப்பால் பிழைக்க முடியாதென்று தமிழ்தெரியும் எனத் தமிழர்களை ஏமாற்றித் திரிகின்றவர் என்பதையும் தமிழ் மக்கள் அறிந்துவைக்க வேண்டும்.

நேயம்

இது நேசம் என்னும் வட சொல்லின் சிதைவாம்.

சீவக சிந்தாமணியில் 3049-ம் செய்யுளில்,

நெய்போதி நெஞ்சு

என வந்துள்ளதும், அது நேயம் என்பதையே குறிப்பதும் அறியாதார், பார்ப்பனரும், பார்ப்பன அடிவருடிகளும் கூறுவதையே உட்கொண்டு நேயம் வடசொற் சிதைவென்று கூறித்திரிகின்றார்கள்.

நெய் என்ற சொல்லினடியாகப் பிறந்த பண்புப்பெயர் ஆதலின் தூய தமிழ்ச்சொல்லே என அறிக.

மீன்

இதுகூட மீனம் என்ற வட சொல்லின் சிதைவாம்.

மின்னல் என்பது அல் இறுதிநிலை பெற்ற தொழிற்பெயர். அது அவ்விறுதிநிலை கெட்டு மின் என நிற்பதுண்டு. அந்நிலையில் அதை முதனிலைத் தொழிற்பெயர் என்பார்கள். அம் முதனிலையாகிய மின் என்பதும் முதல் நீண்டு மீன் என்றுஆகும். அந்நிலையில் அதை முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்பார்கள்.

எனவே மீன் என்பது முதனிலை திரிந்த தொழிற்பெயர். அது தொழிலாகு பெயராக மீன் என்னும் கோளைக் குறிக்கும்.

எனவே மீன் தூய தமிழ்ச்சொல். காரணப் பெயர்.

கோள்மின்னும் மீன் சூழ் குளிர்மாமதித் தோற்றம்

என்ற சான்றோர் செய்யுளையும் நோக்குக. மின்னுவது மீன் எனக்காரணப் பெயராதல் உணர்க.

ஆசை

இது ஆசா என்ற வடசொல்லின் திரிபு என்று கதைப்பர் பார்ப்பனரும் அவர் வால் பிடிக்கும் தமிழர் சிலரும்.

மனம் தன்னிலை நிற்றல், பொருள் அடையத் தக்க நிலை என்பர் அறிந்தோர். அஃதன்றி அம் மனம் வெளிப்பொருள் நோக்கி அசைதல் என்பது துன்பம் பயப்பது அன்றோ?

எனவே அசைதல், அல்லது அசைவு என்பது மனத்தின் அசைவு ஆயிற்று.

அசைதல் தொழிற்பெயர். அசை முதனிலைத் தொழிற்பெயர். ஆசைமுதனிலை திரிந்த தொழிற் பெயர்.

ஆசை தூய தமிழ்ச்சொல் என்க. மனம் பிறவற்றிற்செல்லுதல் என்பது அதன்பொருள்.

உதவி என்பதற்கு ஒத்தாசை என்றது இழி வழக்காக வழங்கி வருகின்றது. இந்த ஒத்தாசை என்பதில் அசை என்பதுதான் ஆசை என நீண்டது என அறிதல் வேண்டும். அசைதல் என்பது ஆசைஎன ஆனதற்குப் பேச்சு வழக்கில் வந்துள்ள இதையும் ஈண்டு நினைவுறுத்தினோம்.

பூசை

இது பூஜா என்ற வடசொல்லின் சிதைவு என்று ஏமாற்றுவார் ஏமாற்றுவர்.

பூசு+ஐ என்பன தொழிற்பெயர் முதனிலையும் இறுதி நிலையுமாகும். பூசுதல் என்பது தானே இது?

பூசுதல் என்றால் தூய்மை செய்தல் கழுவுதல் என்பது பொருள். இவ்வழக்கு இன்றும் திருநெல்வேலிப் பாங்கில் இருக்கக் காணலாம்.

இனிப் பூசு என்ற முதனிலை அன் சாரியை பெற்றுப் பூசனை என்றும் வரும்.

எனவே, பூசை, பூசனை தூய தமிழ்ச் சொற்கள் என முடிக்க.

நாடகம்

இது தூய தமிழ்ச் சொற்றொடர். வடமொழியன்று.

நாடுகின்ற அகம் என விரியும் நிகழ்கால வினைத்தொகை நிலைத்தொடர் என்பர் தொல்காப்பியர்.

இனி அகம் என்ற சொல்லுக்கு,

> அகம், மனம், மனையே, பாவம்
> அகலிடம் உள்ளும் ஆமே

என்ற நூற்பாவினால் பொருள் காணுக. நாடு அகம் என்பதில் வரும் அகத்துக்கு அகலிடம் என்று பொருள் கொண்டு, மக்கள் உள்ளம் நாடுகின்ற அகன்ற இடம் என்று கொள்க. இது நாடகமாகிய இடத்தைக் குறித்தது.

இனி,

நாடுகின்ற பாவம் அதாவது மெய்ப்பாடு எனக்கொண்டு நாடுகின்ற ஆடல் நிலை என்றும் பொருள் கொள்க.

எவ்வாறாயினும் நாடகம் என்றது தூய தமிழ்ச்சொற்றொடர் என்பதில் தமிழர்க்கு ஓர் ஐயமும் வேண்டா.

என் கருத்தில்....

வள்ளுவர்க்கு நிறமில்லை மதமும் இல்லை
மதங்கட் [கு] அப்பாலிருந்தே குறள் செய்துள்ளார்
உள்ளசிறு மதங்குறிக்கும் சொற்கள் கொண்டே
உவகையொடு தத்தமது மதத்தில் சேர்த்துத்
தெள்ளிவைத்த நீறிடுதல், திருமண் சார்த்தல்,
செழும்பிண்டி அமர்ந்தானைச் சேர்ந்தா னென்னல்
தள்ளிவைத்த மரபென்று பேசல் யாவும்
சரியென்று தோன்றவில்லை யென் கருத்தில்...!

எவர் பெரியார்...? - அவர் வாழ்க...!

குமரி நாட்டின் தமிழ்நான் மறைகள்
அமிழ்ந்தன ! வடவர் மறைகள் நிமிர்ந்தன !
தமிழன் முதலில் உலகினுக் களித்த
அமிழ்துநேர் தத்துவம் ஆன எண்ணூல்
அமிழ்ந்தது ! வடவரின் அறிவுக் கொவ்வாப்
பொய்ம்மைகள் மெய்ம்மைகள் ஆகிப் பொலிந்தன!
அகத்தியன் தொல்காப் பியன்முத லானவர்
தகுதிறம் தமிழிற் பெறுதிறம் அருளிய
எண்ணருங் கண்ணிகர் தமிழ்பாடும் ஏடுகள்
மறைந்தன ! வடவர் தீயொழுக்க நூற்கள்
நிறைந்தன ! இந்த நெடும்புகழ் நாட்டில்
"தீதுசெய் யற்க செய்யில் வருந்துக
ஏதும் இனியும் செய்யற்க" வெனும்
விழுமிய தமிழர் மேன்மை நெஞ்சலாம்
கழுவாய் எனுமொரு வழுவே நிறைந்தது.
"நல்குத்தல் வேள்வி" என்பது நலியக்-
கொல்வது வேள்வி எனும்நிலை குவிந்ததே !
ஒருவனுக் கொருத்தி எனும்"அகம்" ஒழிய
ஐவருக் கொருத்தி எனும்அயல் நாட்டுக்
குச்சுக் காரிக்குக் கோயிலும் கட்டி
மெச்சிக் கும்பிடும் நிலையும் மேவிற்று.
மக்கள் நிகர்எனும் மாத்தமிழ் நாட்டில்
மக்களில் வேற்றுமை வாய்க்கவும் ஆனதே!
உயர்ந்தவன் நான்என் றுரைத்தான் பார்ப்பான்
அயர்ந்தவன் நான்என் றுரைத்தான் தமிழன்
இப்படி ஒருநிலை காணுகின் றோமே.
இப்படி எங்குண் டிந்த உலகில் ?
இறந்த காலத் தொடக்கத் திருந்து
சிறந்த வாழ்வுகொள் செந்தமிழ் நாடு
இழிநிலை நோக்கி இறங்குந் தோறும்
பழிநீக் கிடஎவன் பறந்தான் இதுவரை?
இதுவரை எந்தத் தமிழன் இதற்கெலாம்
பரிந்துபோ ராடினன்? எண்ணிப் பார்ப்பீர் !
தமிழன் மானம் தவிடுபொடி ஆகையில்
வாழாது வாழ்ந்தவன் வடுச்சுமந்து சாகையில்
ஆ'என்று துள்ளி மார்பு தட்டிச்
சாவொன்று வாழ்வொன்று பார்ப்பேன் என்று
பார்ப்பனக் கோட்டையை நோக்கிப் பாயும்இவ்
அருஞ்செயல் செய்வார் அல்லால்
பெரியார் எவர்? — **நம் பெரியார் வாழ்கவே!**

அவன் மேற் காதல்...

ஆடட்டுமா? — கொஞ்சம்
பாடட்டுமா? அத்தான்... (ஆ)

உயிர் தளிர்க்கப் பாடும் பாவலனே—என்
உளங் களிக்கப் பேசும் நாவலனே
மயலுக்கு மருந்தொன்று தேடி வந்தேன்-உன்
மலராத முகங்கண்டு மனம் நலிந்தேன். (ஆ)

வெண்பாத்தேன் சொரியும் ஒரு நேரம்—பின்
விருத்த மழைபொழியும் (உன்) இதழோரம்
கண்பார்த்துன் பொன்னுன வாய் திறந்தால்
[—நல்ல
கட்டாணி முத்துக்கள் சிந்திவிடுமா? (ஆ)

மறவன் உருவிய ஓர் வாள்போலே—ஒளி
வாரி வழங்கும் உன் கண்ணுலே
நிறையஎன் மனம் பட்ட புண்ணுலே—உன்
நினைவு கலங்குவதும் எதனுலே? (ஆ)

சோலையுள் வானமும் நீலக் கடலும்—பசுந்
தோகை மயிலும் ஒரு கொஞ்சுகிளியும்
காலப் புதுமையும் உன் உள்ளத்திலே—கவி
காட்டினவா தமிழ் வெள்ளத்திலே! (ஆ)

★

குறிப்பு: *பன்னுட்களுக்கு முன் என்னுல் எழுதப்பட்ட இதில் உள்ள தொடர்கள் சிலவற்றை வேறு பாவலர் எழுதியதாகப் பட முதலாளிகள் வெளியிட்டதும் படிப்போர்க்கு நினைவிருக்கும்.*

குயிலே!

—துரை - மாணிக்கம்—

நாவும் இனிக்க, நறுந்தமிழின்
நறவை மாந்தி நெஞ்சினிக்கக
கூவுங் குயிலே! தேமாவின்
கோதுண் டிருந்து மலர்மலர்வாய்த்
தாவுங் குயிலே! தண்டமிழின்
தனித்த சீர்த்திப் பெரும்புலவன்
பாவும் இசைத்தே யாங்கொடுக்கும்
பாலும் பழமும் பெறுவாயே!

ஏடும் மணக்க, இளந்தமிழில்
இசையும் மணக்கத் தீம்பாடற்
பாடுங் குயிலே! பழந்தமிழர்
பகையும் மறந்தே பணியாற்றித்
தேடும் பெருமை திகழ்தற்கே,
தீம்பண் ணிசைத்துத் தனித்தமிழர்
நாடுங் கேட்டே, யாங்கொடுக்கும்
நறவுந் தளிரும் பெறுவாயே!

நாளும் பயில நற்றமிழ்ப்பா
நாட்டுங் குயிலே! ஒன்றுரைப்பேன்
கேளாய்! சீர்த்தித் தனிநாட்டைக்
கேட்டும் மறுப்பார்க் கிந்நாட்டுத்
தூளும் மிஞ்சா தென்பதையும்,
தோள்கள் கோடி, தாயின்மேல்
சூளுற் றதையும் நீகூறிச்
செந்தேன் தினைமாப் பெறுவாயே!

உலகுக்கு

......புத்தர் — பெரி

கந்தை உடைஉடுத்துக் கைப்பிள்ளை தானேந்தி
வந்தாள் ஒருத்தி "வழியேதும் இல்லை உங்கள்
வீட்டில் இட்ட வேலை செய்வேன் வேண்டியதெல்லாம் என்றன்
பாட்டுக்குத் தக்க படி" என்று சொன்னவுடன்
சோறு தருவதென்றும் திங்கள் தொறும்வெள்ளி
ஆறு தருவதென்றும் வேலைக் கமர்த்திடவே
இட்ட பணிசெய்தாள் நடுப்பகலில் என்மனைவி
வட்டிலிலே சோறுகறி வட்டித்தே உண்என்றாள்

"சாலையிலோர் வீட்டுக் குறட்டில்என் தாய் ஒருத்தி,
மேலும் இரண்டுபேர் தங்கையரை வெம்பசிதான்
வாட்டி வருத்தும்;இந்த வட்டிலொடு போய்அவர்க்கே
ஊட்டி வரவேண்டும்" என்றே உரைத்துநின்றாள்.
உண்ணாரோ? ஊட்டுவதேன்? என்றுரைத்தாள் என்மனைவி.
"கண்ணில்லார் மூவரும்" என் றாள்கலங்கும் கண்ணுடையாள்.
என்மனைவி நெஞ்சம் இரங்கியே "நீ ஓடி
அன்னவரை இங்கே அழைத்துவா" என்றுரைத்தாள்.

சாய்வுநாற் காலியிலே சாய்ந்திருந்தேன் என்எதிரில்
தாய்,இரண்டு பெண்கள் தலைமகளின் கைபற்றி
வந்து வரிசையாய் நின்றார்கள். பிள்ளைக்குக்
குந்தியே பாலூட்டிக் கொண்டேவே லைக்காரி
மூவர்க்கும் சோறூட்டி மூன்றுவிரல் தானுண்டு
யாவர்க்கும் நெஞ்சில் இரக்கத்தை ஊட்டிநின்றாள்.
ஏழைப் பணிப்பெண்ணே "இந்த நகரமன்றம்
ஏழைகளுக் கேதேனும் ஏற்பாடு செய்கிலையோ"
என்றுநான் கேட்டவுடன், "இந்த நகரமன்றம்
ஒன்றுமில்லா எங்கட்கா ஒத்தாசை செய்யும்?" என்றாள்.

எண்ணக் கடலிலே நான்ஆழ்ந்தேன்; இக்கிழவி
கண்ணில்லாள் காமத்தை வென்றிருந்தால், இன்றிந்தப்
பெண்ணிரண்டும் ஏழைப் பெரியபெண்ணும், பிள்ளையும்
உண்ணுதற்கும் கட்ட உடைக்கும் சிறிதேனும்

மீட்சி உண்டா?

யார் — வள்ளுவர்......

ஒத்தாசை யற்ற உலகில் பிறந்தழியார்!
தொத்துநோய்க் காமம்வந்து தொட்டுவிட்ட போதிலுமே
கற்றவர்கள் சொல்லும் கருத்தடை முறைதனைப்பின்
பற்றி யிருந்தாலும் பழிநேர்ந் திராதன்றோ!

கண்ணிலார் இம்மூவர் மட்டுமா? எண்ணிலார்!
எண்ணிலார் காதிலார்! காலிலார், கையிலார்
எண்ணிலார்! உண்ணிலார் எண்ணிலார்! ஏதிருந்தும்
உள்நிறை வில்லார் உலகத்தில் எண்ணிலார்!
தப்ப முடியாத சாவுகள் மூப்பு,நோய்
எப்புறமும் உண்டன்றோ, முப்போதும் துன்பன்றோ!

புத்தர்பிரான் அன்றுகண்ட பொல்லா உலகென்முன்
பொத்தெனக் குதித்தது. நான் "போ"என்றேன். போகவில்லை.
எண்ணிப்பார் என்றுரைத்தான் எங்கிருந்தோ புத்தர்பிரான்!
எண்ணக் கடலினின் றேறவில்லை நானும்
மக்களெலாம் காமத்தை மாய்க்கத்தான் வேண்டுமா!
மக்கள்வரும் வாயில்களைச் சாத்தத்தான் வேண்டுமா!
யாரும் பிறவாமை இன்ப நிலைதானோ?
பாரிற் பிறப்புநிலை பட்டழிய வேண்டுமா!

ஈரா யிரத்தைந்நூ றியாண்டின்முன் இவ்வுலகில்
சீரார்ந்த புத்தர்நெறி இன்றும் சிறக்குமா!

ஈரோட்டார் என்பெரியார் "மக்களிலே தாழ்வுயர்வுப்
போராட்டம் வேரற்றுப் போனால் உலகில்
நலிவில்லை எய்தும் நலம்"என் றருளினார்!
தலையின்மேற் கொள்ளவே தக்கதன்றோ அன்னதுவும்!
வள்ளுவனார் இப்பெரிய வையத்தைக் காப்பதற்கோர்
தெள்ளு தமிழ்ப்பாட்டும் செப்பினார் அஃது:
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை.

கூவாய் கருங்குயிலே!

— அருளரசன் —

குயிலே! குயிலே! சிறுகருங் குயிலே!
மாந்தளிர் உண்டு மகிழ்ந்துபண் பாடிப்
பூஞ்சோ லையெலாம் புகூஉம் குயிலே!
உன்னிடஞ் சொல்வதை ஒண்டமிழ் நாட்டில்
மன்னியே வாழ்ந்திடும் மக்கள் தம்பால்
மணிவாய் திறந்து தணிவாய்க் கூறித்
தமிழிசை பரப்பச் சடுதி புறப்படு!
அமைதியே யில்லை; ஆக்கமே யில்லை!
அழகிய தமிழ்த்தாய்க்(கு) அன்றன்றும் இன்னல்
இழைப்பதே தொழிலென இருக்கும் தீயவர்
இந்தி யென்னும் வெந்தணல் பரப்ப
இயன்ற வரையிலும் முயன்றுபார்க் கின்றனர்!
மொழிவெறி பிடித்த மூடர்கள் சில்லோர்
விழியிமை யாமல் விழைந்த உளத்தொடு
செல்வம் நல்கியும் செல்வாக்குத் திரட்டியும்
கணக்கா யர்களைக் கணக்கற அமைத்தும்
பாடஞ் சொல்லப் பண்ணியும் முனைந்து
வளர்ச்சி தேடக் கிளர்ச்சிசெய் கின்றனர்!
இலக்கிய வளமோ இலக்கண நலமோ
எதுவும் இலாத இந்தியை இற்றைநாள்
பொதுமொழி யெனினும் புறக்கணித் திடுவோம்!
முதுமொழி தமிழாம் மொய்ம்மலர்க் காவைக்
கதுமென வளர்க்கக் காதல் எழுப்பித்
தாவாச் சீர்பெறத் தமிழர்
கூவாய் குயிலே! குரலெடுத் தினிதே!

★

செவ்வாய்க் குயில்

ஞாயிறு தோறும் வெளிவந்த "குயில்" இனிச் செவ்வாய் தோறும் வெளிவரும்.

ஞாயிறு விடுமுறை நாளா தலின் வாங்குவோர் கையில் குறித்த காலத்தில் சேர்க்கத் தோதுபடவில்லை.

எனவே, அடுத்த இதழ் செவ்வாய்க்கிழமை 17-6-58 அன்றே கிடைக்கும்.

—அமைச்சர்.

★

சாதி மறுப்பு

பார்ப்பனர்மே லானவரோ? பாரிலுள்ளோர் தாழ்ந்தவரோ?
தீர்ப்பறிய வேண்டின்நீ தேவர்குறள் — பார்ப்பாய்:
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்.

★

அம்மநான் அஞ்சு கின்றேன்.

கு. சிவா. எம். ஏ.

வில்லுமிழ் வாளி அஞ்சேன் விதிதனைச் சற்றும் அஞ்சேன்
தொல்புகழ்ச் சீர்கொள் எந்தாய் தமிழ்தரும் அமுதம் உண்டு
வல்லமை பெறாத லின்றி வழக்குகள் பேசி நிற்கும்
புல்லறி வாளர்க் காணின் அம்மநான் அஞ்சு கின்றேன் !

சொற்றரும் வடுக்கள் அஞ்சேன் சோர்வுசூழ் செயல்கள் அஞ்சேன்
கற்றஓர் மொழியின் மோகம் கனத்திடக் கதைதி ரித்து.
நற்றவம் உற்ற உன்றன் பொற்பினை நைக்கும் அன்னைப்
பற்றிலாப் பதடி காணின் அம்மநான் அஞ்சு கின்றேன் !

செந்தழல் வெம்மை அஞ்சேன் சிறியரின் சீற்றம் அஞ்சேன்.
அந்தமில் பொருளொ டின்பம் அறஞ்சொலும் மறைப யந்த
அந்தமிழ்த் தாயின் ஏற்றம் அறிந்திட அகக்கண் ணற்ற
அந்தகர் தம்மைக் காணின் அம்மநான் அஞ்சு கின்றேன்!

திண்ணிய நஞ்சம் அஞ்சேன் தீவினை யாளர்க் கஞ்சேன்
விண்ணொடும் ஆழி மண்ணும் விளங்கிய நாள்சி றந்த
பண்ணியற் கூத்தின் பான்மை பயின்றிடும் பண்பி லாத
வண்கணார் வறட்டுக் கூச்சல் அம்மநான் அஞ்சு கின்றேன் !

கூற்றமே வரினும் அஞ்சேன் மாற்றலர் கொள்கை அஞ்சேன்.
வேற்றொரு மொழிபு கழ்ந்துன் விளைவினிற் களைநி றைத்துத்
தூற்றியே தருக்கி நின்றன் தூய்மையைக் கெடுக்கும் உண்மைக்
கூற்றுவர் தம்மைக் காணின் அம்மநான் அஞ்சு கின்றேன்!

புகழ்ந்திடும் பொய்யர் அஞ்சேன் போற்றிடார் உரையும் அஞ்சேன்.
திகழ்ந்திடும் விந்தை மேவும் தீந்தமிழ்ப் பனுவல் கேட்க
இகழ்ந்திடும் ஈசன். போற்றல் உகந்திடான் என்று ரைத்து
மகிழ்ந்திடும் புல்லர்க் காணின் அம்மநான் அஞ்சு கின்றேன்!

துன்பமே அனைத்தும் சேர்ந்து துயர்க்கடல் ஆழ்த்தின் அஞ்சேன்
அன்பினால் கேளிர் ஆவீர். அறநெறி வாழ்வில் கொள்வீர்
இன்பிலே ஞாலம் ஆழ்க’ என்றநின் பண்பு கொள்ளாக்
கன்மனத் தாரைக் காணின் அம்மநான் அஞ்சு கின்றேன்!

துன்பத் தூண்டுகோல்

(ஆ. அழகன்)

நீல நிறமிட்ட வானத் திரைதனில்
நித்திலத் தைஇறைத் திட்டுவைத்துக்
கோல நிலாவென்ற தீய குறும்பனைக்
கூடி விளையாட விட்டது யார்?
கால மெனுங்கொடி யோனவர் போனபின்
கண்கட்டு வித்தைகள் காட்டுகிறான்!
சால மிகுந்திடும் தாங்கருந் துன்பத்தைத்
தண்ணிலவு வேறு தூண்டுகிறான்

கொல்லைக் கொடிகளில் முல்லைக் கொடிதனிற்
கொத்தெனப் பூத்துக் குலுங்கும் மலர்
ஒல்லையென் காதலர் நீங்கிய தால் நகைத்
திட்டன வோ உரைப் பாய் தோழீ!
அல்லல் தரும்தனி மையவர் போனபின்
ஆருயி ரை யலைக் கும்போதில்
மெல்ல வருந்தென்றல் சொல்லொணாத் துன்பத்தை
மேலும்மே லும் மிகத் தூண்டுவதோ?

நீலத் திரைக்கடல் ஓல மிடுவதும்
நீங்கித் துணையைப் பிரிந்தேற்குச்
சாலை தனிலொரு மாமரத் தில்குயில்
தன் துணை யோடு பண் பாடுவதும்
காலை முதற்கொண்ட தொல்லையைத் தூண்டும்
கருத்தினி லோ எனக் கண்டறியேன்
கோல இரவுமே போனதில் லை யதும்
கூடி என் துன்பத்தைத் தூண்டுவதோ?

ஆள வந்தார்க்கு...

''ஐயகோ! என் அருமை இந்தியத் தோழர்களே! கேட்டீர்களா சேதியை. செக்கிழுக்கச் சொல்கின்றனும். செருப்புத் துடைக்கக் கூறுகின்றனும். கல்லுடைக்கக் கட்டளை இடுகின்றனும். மறுத்தால் கசையடியாம். விரும்பிய உணவில்லையாம். உறங்கக் கட்டில் கிடையாதாம். உரக்கப் பேசக்கூடாதாம். கொலைகாரன், கொள்ளைக்காரன் போன்று நடத்துகின்றனும். நினைத்தாலே இரத்தம் கொதிக்கிறது. நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது. சிறைக்குள்ளிருக்கும் விடுதலை விரர்கள் படும் அல்லல்கட்கு அளவே இல்லை..'' என்றெல்லாம் இற்றைக்குப் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு மேடைதோறும் முழங்கி வந்தனர் கதருடைக் கண்ணியவான்கள்.

இன்று மக்களுக்காக மக்களால் நடத்தப் படுகின்ற மக்களாட்சி என்ற போர்வையில், அரசு கட்டிலேறிய பிறகு, சிறை சென்றோர் திரும்பி வருவதே அரிதாகி விட்டது. திரும்பி வந்தாலும் அவர்களை உற்றார் உறவினர்களால் ஏன் பெற்ற தாயால்கூட எளிதில் கண்டுகொள்ள இயலவில்லை. காங்கிரசுப்போராட்ட காலத்திலே பன்முறை சிறை சென்று திரும்பியோர் இன்னும் உயிர் வாழுகிருர்கள். ஆனல் சாதி ஒழிப்புப் போராட்டத்திலே ஈடுபட்டுச் சிறை சென்ற வெள்ளைச்சாமி இராமசாமி, நடேசன், மஜீத் முதலானேர் விடுதிரும்பாமலே நேரே கல்லறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அன்றொரு நாள் காஷ்மீர் சிறையிலே ''சியாம பிரசாத் முகர்ஜி'' உயிர் துறந்தபோது ''என் மகனை அடித்துக் கொன்றுவிட்டார்களே'' என அன்னரின் அன்னை கதறி அழுதபோது, சேச்சே ஆசிய ஜோதியின் ஆட்சியிலா இப்படி நடந்திருக்கும்; பெற்ற மகனைப் பிரிந்த துயரத்தில் ஏதோ பிதற்றுகிருர்கள் என்றுதான் அனைவரும் எண்ணினர்; நாமும் நம்பினேம். ஆனல் இன்று திருச்சி சிறையிலே நம் தோழர்கள் வயிறு கடுக்கிறதே, எனக்கதறும்போது, இங்கேதானே கடுக்கிறது. இந்த வயிறு இருப்பதால் தானே சீதம் கொட்டுகிறது, எனக் கூறியவாறு மருத்துவ அறிஞர்கள் வலி கண்ட வயிற்றிலே பூட்ஸ்காலால் எட்டி எட்டி உதைத்தார்களாம். (இச் செயல் கண்டு கொதித்தெழுந்த நம் தோழர்களை அன்று நீடாமங்கலம் ஆறுமுகம் பெரியாரின் ஆணையின் பெயரால் தடுத்து நிறுத்தாமல் இருந்திருப்பாரேயானல் இந்நேரம் சாதி ஒழிப்பிற்காக வட்டந்தோறும் சாதி ஒழிப்பு மாநாடுகளும், பட்டி தொட்டிகளிலெல்லாம் பொதுக் கூட்டங்களும் நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. அரசினர் சட்டம் இயற்றினலும் இயற்ருவிட்டாலும் சாதி ஒழிந்தே இருக்கும்.)

அகிம்சையின் பேரால் தந்திக் கம்பங்களையும், தண்டவாளங்களையும் தகர்த்தெரிந்து வீட்டுத் தியாகிகளானேரே அமைதியான முறையில் சாதி ஒழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட ஐயாயிரம் தமிழ்ப் பெருமக்களைக் கொடுந் தண்டனைக்கு ஆளாக்கி வெஞ் சிறையிலே வாட்டி வதைக்கின்றனர்.

வெள்ளையர் காலத்திய போராட்டத்தில் ஈடு படுவோர் மட்டுமே சிறைக்கனுப்பப் பட்டு வந்தனர். இன்ருே போராட்டத்தில் ஒருவர் ஈடுபடுமுன்பே அவரும் அவர் குடும்பத்தினரும் சிறைக்குள் பூட்டி வைக்கப்படுகின்றனர். இதைவிட மானக்கேடான செய்தி என்னவெனில் 1946க்கு முன்பு ஷேக் அப்துல்லா குற்றவாளி எனக் கருதப்பட்டால் அவர் மட்டும் கைது செய்யப்படுவார். இன்ருே அவரோடு அன்னரின் நாயும் சிறைக்கனுப்பப் படுகின்றது.

நேற்று ரௌலட் சட்டத்தை எதிர்த்து இடிமுழக்கம் செய்தோர் தான் இன்று தடுப்புக் காவல் சட்டமென்ற பெயரில் ஆள் தூக்கிச் சட்டத்தையும் உலகஅரங்கெங்கனும் காணப்படாத புதுமையான தேசிய அவமதிப்புச் சட்டத்தையும் கொண்டு வந்திருக்கின்றனர்.

இன்றைய ஆட்சியாளர் போக்கினை நினைக்கும் போது,

ஆட்சியெனில் ஐம்பொறியை ஆள்வ
தாகும்
அடுக்காத செயல் செய்தோன் ஆளக்
கூடும்
காட்சியிலே காணுமுகில் ஓவியந்தான்
கலந்துவிடும் ஓர்நொடிக்குள் நிற்ப
தில்லை.

என்ற கவிதை வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

எனவே, இனியேனும் ஆட்சிப் பீடத்திலிருப்போர் பொறுப்புணர்ந்து சிறையிலே வாடும் நம் தோழர்களை நன்முறையில் நடத்த வேண்டுகிருேம். இல்லையெனில் இன்றில்லா விடினும் நாளை பண்டிட் பந்த்களும், பக்தவத்சலங்களும் பதில் சொல்லியே ஆகவேண்டும் என எச்சரிக்கின்ருேம்.

— மணி.

ஆசிரியருக்கு அஞ்சல்

(கேள்வியும் விடையும்)

கேள்வி :

கலாசாலை என்பது வடமொழித்தொடர். அதைத்தான் தமிழர்கள் கல்லூரி என்று சொல்லித் திரிகிறார்கள் என்று என் பார்ப்பன நண்பர்கள் சொல்லுகிறார்கள். எப்படி ?

விடை:

கலாசாலை என்பது கலப்பில்லாத வட சொற்றொடரா? என்பதும் ஆராய்ச்சிக்குரியது. அதுகிடக்க....

கல்லூரி என்பது பற்றிப் பார்ப்பன நண்பர்கள் கருத்துரைத்தார்கள் எனில், அவர்கட்கும் தமிழுக்கும் என்ன தொடர்பிருக்க முடியும். தமிழாராய்ச்சியேனும் அவர்கட்கு உண்டா? என்று நாம் கருதிப்பார்த்து, அவர் உரை கரடி என்று தள்ள வேண்டும்.

ஈண்டு நாம் எடுத்துக்காட்டும் செய்யுளை உற்று நோக்குக:

கலத்தற் காலம் கல்லூரிநற் கொட்டிலா
மூலைத் தடத்திடை மொய்எருக் குப்பையா
இலக்கம் என்னுயி ராஎய்து கற்குமால்
அலைக்கும் வெஞ்சரம் ஐந்துடை யானரோ.

என்னும் சிந்தாமணிச் செய்யுளில், கல்லூரி பயிலும் இடம் என்று பொருள் தரல் கண்டு மகிழ்க.

உயர்க நின் புகழே!

—தகட்டூர். மா. இராமலிங்கம்—

வாழிய அன்னையே! வாழிய அன்னையே!
தொழுதுனை வழுத்தினேன் தூயசீர் அன்னையே!
மிடியிருள் நீங்கி விடியல்வந் துறவும்
என்னினித் துயில்வது - எழுந்துமுன் பாராய்!
நின்புகழ்க் கதிரவன் நேரவந் துற்றனன்
அன்புருஉக் கொண்ட அன்னையே எழுக!
என்மனம் குடிகொளும் இறைவியே எழுக!
செந்நாப் புகழ்பாடச் செல்வியே எழுக!
புகழ்சால் அன்னையே புறக்கணி யோம்யாம்
புவிதனில் எங்கணும் புகழினைப் பரப்புவோம்
பண்டைநின் சிறப்பைப் பாடும் நாங்கள்
மறந்துனைத் துறப்பமோ, மயங்காய் அன்னையே!
இலக்கிய வளமிலா இந்திப் பெண்ணும்
ஏட்டள வேயுள வடமொழி யாளும்
நாணி ஓடிட நடப்பாய் அன்னையே!
சிலம்புகள் ஆர்க்க மேகலை ஒலிக்கச்
செவ்விய குண்டலம் செவியினி லாடச்
சிந்தா மணிச்சுடர் ஒளியினை உமிழ
வளையா பதிநின் கையினிற் சரியப்
பெருமைகொள் நிலையினிற் பிறங்குவாய்
அன்னையே!
கடுந்துயர்ப் பிணியினைக் களைக! எழுக!
ஏறுக பீடுறும் அரியணை
வீறுக தமிழ்மணம்! உயர்கநின் வெற்றியே!

மத மறுப்பு

சமையக் கணக்கர்கள் சாற்றுவன கேளேல்
அமைவுதனை வேண்டின்நீ தேவர் — தமிழைப்பார்;
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

முறைகோடி மன்னவன் என்ற குறட்பா உரை

முறைகோடி மன்னவன் செய்யின் உறை
ஒல்லாது வானம் பெயல். [கோடி

இது கொடுங்கோன்மை என்னும் அதிகாரத்தில் கூ ஆம் செய்யுள். இதற்குப் பரிமேலழகர் கூறும் பொருள் வருமாறு:

மன்னவன் முறைகோடிச் செய்யின்-மன்னவன் தான்செய்யும் பொருளை முறை தப்பச் செய்யுமாயின்; உறை கோடி வானம் பெயல் ஒல்லாது—அவனுட்டுப் பருவமழை இன்றும் வகை மேகம் பொழிதலைச் செய்யாது.

இரண்டிடத்தும் கோடவென்பன திரிந்து நின்றன. உறை கோடுதலாவது பெய்யும் காலத்துப் பெய்யாமை. அதற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப என்பது.

இவ்வுரையில் நமக்கெழும் கேள்வி என்ன வெனில் மன்னவன் முறைகோடிச்செய்தால் அதைக் காரணமாகக் கொண்டு முகில் பொழிதலைச் செய்யா தொழியும் எனின், முகில் அறிவுடைப் பொருளா? – அறிவுடைப் பொருள் என்பதற்குச் சான்று என்ன? - இருக்க முடியாது. ஆனல் முகில் பெய்வதென்பது இயற்கையின் கொடை எனின் மறுப்பார் யார்?

ஆதலின் பரிமேலழகர் கூறிய இப்பொருள் பொருந்துவதன்று என்பதோடு வேள்விக்கு மழை கட்டுப்படுவது என்று கூறி மக்களை ஏய்க்கும் ஓரினத்தாரின் கொள்கையை வலியுறுத்தவே இவ்வாறு பொருந்தாப் பொருள் புகன்றார் என்றும் அறிதல் வேண்டும்.

இச்செய்யுட்குரிய பொருள் வருமாறு:

மன்னவன் முறை கோடி செய்யின்—அரசன் செய்யத்தக்க செயல்களை முறை தவருகச் செய்வானாயின், உறைகோடி - (ஏரி குளம் முதலிய) நீர்த் தேக்கங்கள் சீர்கேடு அடைதலாலே. வானம் பெயல் - வானம் பெய்தலை, ஒல்லாது - தேக்குதல் செய்யமாட்டா என்பது.

ஏரி, குளங்களை மண்ணெடுத்துக் கரைஉயர்த்தி நீர் தேங்குமாறு செய்தால்தான் உழவுத் தொழில் நன்றாகிக் கழனிகள் விளைவு தரும் என்றார் என்க.

இதில் உறை தொகுதி ஒருமை. அது தொழிலாகுபெயராய் உறையுமிடத்திற்கானது. உறு - முதனிலை. ஐ – தொழிற்பெயர் இறுதிநிலை. கோடி இரண்டும் கோட என்ற செய என்னும் வினையெச்சத் திரிபுகள். பெயல் – இரண்டன் தொகை

மன்னவன் செய்யத்தக்க செயலை முறை தவருகச் செய்தலாவது:

உழவு, தொழில், வாணிகம், வரைவு, தச்சு, கல்வி ஆகிய அரசின் அறு துறைகட்கும் தக்க அமைச்சரை அமைக்காதிருப்பதும், அமைத்தும் மேற்பார்வை இடாதிருப்பதும் ஆகும். இவற்றில் வரைவுஎன்பது பொதுவேலைகளைப் பழுதுபார்க்கும் துறை. இதை இந்நாள் பொது மராமத்து இலக்கு என்பர்.

திருவள்ளுவர் இப்பாட்டை அருளிச் செய்த நால், அவர் முன்னுள் தமிழரசர்க்கு அந்நாள் புலவர்கள் சொல்ல வேண்டிய இன்றியமையாச் சொற்களைச் சொல்லி விழிப்பூட்டியருளினர் என்க.

பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கிக் குடபுலவியனார் என்ற புலவர் ஏரி குளங்களை மண்ணெடுத்துக் கரை உயர்த்தவேண்டியதன் இன்றியமையாமையை வற்புறுத்தி உள்ள ஓர் அரிய செய்யுளைப் புறநானூற்றினுங் காண்க. (புறம்: 18)-

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ...
இவண் தள்ளாஈ தோரே..."

ஏரி, குளங்களை மண்ணெடுத்து ஆழப்படுத்துவது நீர் ஊற்றுக் கருதி மட்டுமன்று. பெய்யும் மழையைத் தேக்கிவைக்க வேண்டும் என்பதைப் பெருநோக்கமாகக் கொண்டே அவ்வாறு செய்வாரென்க. இந்நாள் தொண்டைநாட்டில் கேணியையும் கிணற்றையும் உறை என்றே சொல்லுவது கருதத்தக்கது.

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75.	ரூ. 8—50.
ஆறுமாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 18 காசுக்குத் தபால் தலை அனுப்புக.

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு

முழுப்பக்கத்திற்கு ரூ. 100

அரைப்பக்கத்திற்கு ரூ. 50

கால் பக்கத்திற்கு ரூ. 30

நீண்ட கால விளம்பரத்திற்கும், குறைந்த அளவு விளம்பரத்திற்கும் எழுதுக:

அமைச்சர்,
மா. தண்டபாணி.
குயிலகம் புதுச்சேரி.

"பிசிராந்தையார்"

உரைநடை நாடகம்

குயில் இதழ்தோறும் தொடரும்

எதிர்பார்க்க!

ஆசிரியர்:
பாரதிதாசன்

எழுத்தாளர்க்கு...

கவிதை கட்டுரைகளைக் குயிலின் ஒருபக்க அளவிற்கு, அழகாகத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுக.

வெளியிடப் பெறுதனவற்றைத் திரும்பப் பெறப் போதிய அஞ்சற்றலைகள் அனுப்ப வேண்டும்.

விற்பனையாளர்க்கு...

"குயில்" இதழ்கள் நன்றாகப் பார்வையிட்டே அனுப்பப்படுகின்றன. ஆகையால் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாக முடியாது.

— அமைச்சர்

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன் புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.